தினமணி

# குறைந்து வரும் வெண்டைச் சாகுபடி

வை.இராமச்சந்திரன்

First Published : 01 Dec 2010 03:08:04 AM IST

ஆலங்குளம் : போதிய விலையின்மை,கூலி, ஆள் பற்றாக்குறை, பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றின் விலைஏற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், ஆலங்குளம் பகுதியில் வெண்டைச் சாகுபடி வெகுவாக குறைந்துள்ளது.

ஆலங்குளம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கத்தரி,வெண்டை,தக்காளி, மிளகாய், பெல்லாரி வெங்காயம் உள்ளிட்ட காய்கனிகள் அதிகளவில் பயிரிடப்படுவதுண்டு. ஆனால் அண்மைக் காலமாக வெண்டை பயிரிடுதலை பெரும்பாலான விவசாயிகள் தவிர்த்து வருகின்றனர்.

இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும்,வெண்டை உற்பத்தி செய்வதில் உள்ள பிரச்னைகள் மற்றும் உரிய விலையின்மை ஆகியவையே முக்கியமானவை.

இது குறித்து வெண்டை பயிரிட்டுள்ள விவசாயிகள் சிலர் கூறியதாவது:

வெண்டை பயிரிடுவதற்கு தேவையான,வீரிய ஒட்டு விதைகளுக்காக கிலோ |1000 முதல் | 1200 வரை செலவிடப்படுகிறது. ஆனால் இத்தகைய விதைகளைப் பயிரிடும்போது மஞ்சள் தேமல் நோயால் பாதிப்பு ஏற்பட்டு, காய்கள் வெள்ளை நிறமாக மாறிவிடும். இதைத் தவிர்க்க,மஞ்சள் தேமல் நோய் (வஙய) தாக்காமல் இருக்கக் கூடிய விலைஉயர்ந்த வீரிய ஒட்டுவிதைகளை கிலோ | 2000 லிருந்து | 2400 வரை வாங்கிப் பயிரிடுகிறோம். ஒரு ஏக்கர் வெண்டை பயிரிட சுமார் 1.5 கிலோ முதல் 2 கிலோ வரை விதை தேவைப்படும்.

வெண்டை தனிப் பயிராகவோ, ஊடுபயிராகவோ பயிரிடப்படுகிறது. பயிரிட்ட நாளிலிருந்து 30-வது நாள், 45-வது நாள், 60-வது நாள் என 15 நாள்களுக்கு ஒருமுறை பல்வேறு வகையான இலைவழி உரங்கள் இடவேண்டும். அதோடு,சாறு உறிஞ்சும் பூச்சிகள்,தண்டு துளைப்பான்,காய்ப் புழு,வெள்ளை கொசு போன்றவற்றைக் கட்டுப்படுத்த, நோய்க்கு தகுந்தவாறு மருந்துகளும் அவ்வப்போது தெளிக்க வேண்டும். இதை சரியாகப் பராமரித்தால் மட்டுமே,தரமான வெண்டை கிடைக்கும்.

இதில் நல்ல மகசூல் கிடைத்தால் மட்டும் போதாது. பறிக்க கூலி ஆள்கள் கிடைப்பது அரிதாகிக் கொண்டே வருகிறது. வெண்டை என்றாலே வர பலர் தயக்கம் காட்டுகின்றனர். காரணம், பறிக்கும் நபர்களின் கைகளில் சிறிது நேரத்திலேயே ரத்தம் கொட்ட ஆரம்பித்துவிடும். கையுறைப் போட்டு பறித்தாலுமே ரத்தம் வரும். இதுதவிர பலருக்கு அலர்ஜி ஏற்படுவதுண்டு. வெயில்

அதிகரிக்க அதிகரிக்க அதிகளவில் அரிப்பு ஏற்பட்டு கொண்டே இருக்கும். இதனால்தான் கூடுதல் கூலி கொடுத்தாலும்கூட, வெண்டை பறிப்பதற்கு ஆள்கள் தட்டுப்பாடு நிலவுகிறது.

இவ்வாறு சிரமப்பட்டு விளைவித்த வெண்டையை,சந்தைக்குக் கொண்டு செல்லும் போது,அங்கு வியாபாரிகளால் சில நேரங்கள் தவிர பல நேரங்களில் மிக குறைந்த விலைக்கே வாங்கப்படுகிறது.

சாதாரணமாக ஒரு விவசாயி வெண்டை பயிரிட்டு சந்தைவரை கொண்டு வந்து சேர்க்க ஆகும் செலவு கிலோவுக்கு | 5 ஆகி விடும். அதற்கு மேல் விலை வைத்தால் மட்டுமே விவசாயி லாபத்தைப் பார்க்க முடியும்.

அண்மைக்காலமாக ஆலங்குளம் பகுதியில் வெண்டை கிலோ | 5-க்கு விவசாயிகளிடம் இருந்து பெறப்படுகிறது. இதன்மூலம் விவசாயிகளின் 2 மாத கால உழைப்பு விரயமாகிறது. மூலதனம் இல்லாமல் கடன் வாங்கி தொழில் செய்யும் விவசாயிகள் நிலை வட்டி கொடுப்பதற்கே போதும் போதும் என்றாகி விடுகிறது.

| 5-க்கு வெண்டைக்காய் வாங்கும் மொத்த வியாபாரிகளோ, சில மணி நேரத்திலேயே | 10-க்கு விற்பனை செய்துவிடுகின்றனர். இதன்மூலம் அவர்கள் கிலோவுக்கு | 5 லாபம் பார்த்து விடுகின்றனர். மாதக்கணக்கில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து விளைபொருளை சந்தைக்குக் கொண்டு வரும் விவசாயிகள், பல நேரங்களில் நஷ்டமே அடைகிறோம் என்றனர் அவர்கள்.

வெண்டையை கிலோவுக்கு குறைந்தது |10- க்கு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்தால் மட்டுமே விவசாயிகளுக்கு அது லாபமாக இருக்கும். வெண்டை சாகுபடியில் விவசாயிகளுக்கு ஆர்வமும் ஏற்படும். இல்லையெனில் வருங்காலங்களில் இச் சாகுபடி ஆலங்குளம் பகுதியில் மேலும் குறைய வாய்ப்புள்ளது. இதற்கு வியாபாரிகள் மட்டுமன்றி, அரசும், குறைந்த விலையில் அதிக வீரியமுள்ள தரமான விதைகள், உரம், பூச்சி மருந்து ஆகியன வழங்கினால் இத் தொழில் செய்ய விரும்பும் விவசாயிகளின் சோர்வு நீங்கும்.

**"கூடுதல் விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை'**

First Published : 01 Dec 2010 08:18:23 AM IST

Last Updated : 01 Dec 2010 08:54:54 AM IST

மதுரை, நவ. 30: மதுரை மாவட்டத்தில் அரசு நிர்ணயித்த விலையைவிட கூடுதல் விலைக்கு உரங்களை விற்பனை செய்தால், சம்பந்தப்பட்ட உரக்கடைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, மாவட்ட ஆட்சியர் சி. காமராஜ் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் தெரிவித்துள்ளதாவது:

விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் உரங்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பலர் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து, மாவட்டத்தில் செக்கானூரணி பகுதியில் உள்ள உரக்கடைகளில் அதிரடி சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில், கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்தது தெரியவந்தது.

சம்பந்தப்பட்ட கடையின் விற்பனை உடனடியாக தடை செய்யப்பட்டுள்ளது.

ரசீது இல்லாமல் விவசாயிகளுக்கு உரங்கள் விற்பனை செய்யக் கூடாது.

உரத்தின் விலைப் பட்டியல் விவரம் (50 கிலோ மூட்டைக்கு):

யூரியா- |276.12. பொட்டாஷ் - |262.86. டி.ஏ.பி. (இப்கோ)- |516.85. டி.ஏ.பி. (ஜூவாரி, சி.எப்.எல்.ஆர்.ஐ.பி.எல்.)- |517.40. சூப்பர் பாஸ்பேட்- |116.40.

20:20:0:13 (பாக்ட்)- |358.54. 20:20:0:13 (ஸ்பிக்)-|368.94. 20:20:0:13 (சிஎப்எல்)- |358.54. 16:20:0:13 (சிஎப்எல்)- |336.70. 10.26.26 (சிஎப்எல்)- |405.44. 15:15:15 (ஆர்சிஎப்)- |297.49. 28:28:0 (சிஎப்எல்)- |430.61.

அரசு நிர்ணயித்த விலையைவிட, கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்தால் உரக் கடைக்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்வது தெரியவந்தால், கீழ்கண்ட தொலைபேசி எண்களில் சம்பந்தப்பட்ட பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம்.

மதுரை கிழக்கு- 94432 93406. மதுரை மேற்கு- 94425 22869. திருப்பரங்குன்றம்- 99948 74372. மேலூர்- 99760 37010. கொட்டாம்பட்டி- 94880 10197. வாடிப்பட்டி- 97891 00068. அலங்காநல்லூர்- 94421 29519. டி.கல்லுப்பட்டி- 99424 67870. கள்ளிக்குடி- 94470 14150. திருமங்கலம்- 94443 56421. உசிலம்பட்டி- 99433 46900. செல்லம்பட்டி- 94424 62890. சேடபட்டி- 98652 32649. மதுரை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு)- 99944 07172.

**டிச. 3 விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 01 Dec 2010 07:58:40 AM IST

திண்டுக்கல், நவ. 30: திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், டிசம்பர் 3-ம் தேதி நடைபெற உள்ளது.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் மா. வள்ளலார் தலைமையில் வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு துவங்குகிறது.

மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில், கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விவாதிக்கப்பட உள்ளது.

சென்ற கூட்டத்தில் கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு உரிய பதில்கள், மனுக்கள் பதியும் இடத்தில் வைக்கப்படும். இதை, விவசாயிகள் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

இக்கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்களுடைய கோரிக்கைகளுக்கு தீர்வு காணலாம் என, ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மழையால் காய்கறிகள் சேதம்: விவசாயிகள் கவலை**

First Published : 01 Dec 2010 07:56:48 AM IST

கொடைக்கானல், நவ. 30: கொடைக்கானலில் கடந்த 25 நாள்களுக்கு மேலாக பலத்த மழை பெய்தது. இதனால் கொடைக்கானலிலுள்ள செண்பகனூர், பிரகாசபுரம், வில்பட்டி, அட்டுவம்பட்டி, பூம்பாறை, மன்னவனூர், கிளாவரை போலூர், குண்டுபட்டி, கூக்கால் ஆகிய பகுதிகளில் விளையும் உருளை, கேரட், பீன்ஸ், பீட்ரூட் போன்ற காய்கறிகளில் அதிக அளவில் தண்ணீர் தேங்கியிருந்ததால், அழுகிய நிலையில் காணப்பட்டன. மேலும், காய்கறிகளில் கருகல் நோய், மஞ்சள் புளுநோய் ஆகியவை தாக்கியதில் விவசாயம் பாதிப்படைந்தது.

எனவே, தோட்டக்கலைத் துறை அதிகாரிகள், பாதிக்கப்பட்ட விளை நிலங்களைப் பார்வையிட்டு, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டுமென இப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**திருவாரூர் மாவட்டத்தில் ராஜராஜன் முறையில் 38,737 ஹெக்டேரில் சம்பா சாகுபடி**

First Published : 30 Nov 2010 02:19:39 PM IST

திருத்துறைப்பூண்டி, அக். 29: திருவாரூர் மாவட்டத்தில் 38,737 ஹெக்டேர் பரப்பளவில் ராஜராஜன் 1000 முறையில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக திருவாரூர் மாவட்ட வேளாண் துணை இயக்குநர்கள் எஸ். கோவிந்தசாமி, என். கபிலர் ஆகியோர் தெரிவித்தனர்.

திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள நெடும்பலம் அரசு விதைப் பண்ணையில் செம்மை நெல் சாகுபடி பணிகளை ஆய்வு செய்த பின்னர் அவர்கள் கூறியது:

திருவாரூர் மாவட்டத்தில் நிகழாண்டில் சம்பஹா, தாளடி பருவத்தில் 1 லட்சத்து 44 ஆயிரத்து 817 ஹெக்டேரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 1 லட்சத்து 11 ஆயிரத்து 113 ஹெக்டேரில் சாகுபடி பணிகள் நிறைவடைந்துள்ளன.

எஞ்சிய 33 ஆயிரத்து 704 ஹெக்டேரில் விரைவில் முடிவடையும்.

குறுவை சாகுபடி செய்யப்பட்ட 11 ஆயிரத்து 957 ஹெக்டேரில் இதுவரை 10 ஆயிரத்து 438 ஹெக்டேரில் அறுவடைப் பணிகள் நிறைவடைந்துள்ளன. சராசரி மகசூலாக 5 ஆயிரத்து 518 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. ராஜராஜன் 1000 முறையில் ஒரு ஹெக்டேரில் அதிகபட்சமாக 9 ஆயிரத்து 500 கிலோ மகசூல் கிடைத்துள்ளது.

மாவட்டத்தில் சாகுபடி செயய்பட்டுள்ள பரப்பிற்கு 18 ஆயிரத்து 720 டன் உரம் தேவை. அதில், இதுவரை 9 ஆயிரத்து 924 டன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் யூரியா 3205 டன், டி.ஏ.பி. 3178 டன், பொட்டாஷ் 1471 டன்னும், தனியார் உரக் கடைகளில் யூரியா 1612 டன், பொட்டாஷ் 463 டன், காம்ப்ளெக்ஸ் உரம் 907 டன் கூடுதல் 10 ஆயிரத்து 836 டன் உரம் கையிருப்பில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, 9 பயனாளிகளுக்கு ரூ. 23.22 லட்சம் மதிப்பில் வேளாண் கருவிகளை வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஞானசேகரன், உதவி வேளாண்மை இயக்குநர்கள் டி. நடேசன், எஸ். சிவகுமார், வட்டார வேளாண்மை அலுவலர் ஏ. ஜஸ்டின், நெடும்பலம் அரசு விதைப் பண்ணை மேலாளர் பாலசுப்பிரமணியன, வேளாண்மை உதவி அலுவலர் டி. தவமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மழையால் மிளகாய்ப் பயிர் சேதம்: நிவாரணம் கோரி ஆட்சியரிடம் விவசாயிகள் மனு**

First Published : 30 Nov 2010 12:56:30 PM IST

மானாமதுரை, நவ. 29: மழையால் மிளகாய்ப் பயிர் சேதம் அடைந்ததால் நிவாரணம் கேட்டு சிவகங்கை மாவட்ட ஆட்சியரிடம் மிளகாய் பயிர் விவசாயிகள் மனுக் கொடுத்தனர்.

சிவகங்கை வட்டம், மறவமங்கலம் பிர்கா, சேத்தூர் கிராமத்தில் ஏராளமான ஏக்கரில் மிளகாய் பயிர் நடவு செய்யப்பட்டிருந்தது. தற்போது இப் பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் இப் பயிர்கள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கி விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. சேத்தூர் மிளகாய்ப் பயிர் விவசாயிகள் திங்கள்கிழமை சிவகங்கை வந்து மக்கள் குறைதீர்க்கும் நாளில் ஆட்சியரை சந்தித்து சேதமடைந்த மிளகாய்ப் பயிருக்கு நிவாரணம் கேட்டு மனு கொடுத்தனர்.

தினமலர்

**பூச்சி தாக்குதலில் இருந்து பயிரை பாதுகாக்க ஒட்டுண்ணி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,01:07 IST

நாமக்கல்: "சாகுபடி செய்துள்ள பயிர்களை பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க டிரைக்கோகிரம்மா என்ற ஒட்டுண்ணியை பயன்படுத்த வேண்டும்' என, நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:டிரைக்கோகிரம்மா என்பது முட்டை ஒட்டுண்ணி. அது அட்டை வடிவில் கிடைக்கிறது. 200க்கும் மேற்பட்ட பூச்சி இனங்களை அழிக்கும் வல்லமை கொண்டது. டிரைக்கோகிரம்மா அட்டை சிறு துண்டுகளாக வெட்டி வயலில் பல இடங்களில் இலையின் அடிப்பகுதியில் கட்டவும். அட்டையில் உள்ள முட்டையில் இருந்து டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி வெளியில் வந்து தீமை செய்யும் பூச்சியின் முட்டையினுள் தனது முட்டைகளை இடும். அதனால் தீமை செய்யும் பூச்சிகள் முட்டை பொறிப்பதற்கு முன் கருவிலேயே அழிக்கப்படுகின்றன.

கரும்பில் இடைக்கணுப்புழு, இளம் குருத்துப்புழு, நுனிக்குருத்துப்புழு, நெல்லில் இலைசுருட்டுப்புழு, தண்டு துளைப்பான், பருத்தியில் பச்சைக் காய் புழு, இளம் சிவப்பு காய்புழு, புள்ளிக்காய் புழு, நிலக்கடலையில் பச்சைக்காய்ப்புழு, புகையிலை வெட்டுப்புழு, இலைசுருட்டுப்புழு ஆகியவற்றை கட்டுப்படுத்துகிறது. மேலும், பயறு வகையில் காய்ப்புழுக்கள், சோளம், கம்பு, மக்காச்சோளத்தில் தண்டு துளைப்பான், பழம், மலர் மற்றும் காய்கறியில் காய் துளைப்பான், மொட்டுப்புழு போன்ற புழுக்களை கட்டுப்படுத்துகிறது. பருத்தி, நிலக்கடலை, சோளம், சூரியகாந்தியில் 50 ஆயிரம் பூச்சிகள் ஏக்கருக்கு 3-5 முறை 15 நாட்கள் இடைவெளியில் விடவும். நெல்லில் 40 ஆயிரம் பூச்சிகள் ஏக்கருக்கு மூன்று முறை ஒரு வார இடைவெளியில் விடவும்.

தண்டு துளைப்பானுக்கு நாற்று நட்ட 30வது நாள் முதலும், இலை சுருட்டுப் புழுவுக்கு நாற்று நட்ட 37வது நாள் முதலும் விடவும். கரும்பில் 20 ஆயிரம் பூச்சிகள், ஏக்கருக்கு ஆறு முறை வீதம் 15 நாட்கள் இடைவெளியில் விடவும். இளம் குருத்துப்புழுவுக்கு 30வது நாள் முதலும், இடைக்கணுப்புழுவுக்கு 90வது நாள் முதலும், நுனிக்குருத்துப்புழுவுக்கு 120வது நாள் முதலும் விடவேண்டும்.கிரைசோபா தாய் பூச்சி வயலில் மகரந்தம் மற்றும் தேனை உண்ணக்கூடியவை.

தனது  அருவாள் போன்ற வாய் பகுதியை கொண்டு தீமை செய்யும் பூச்சியின் சாற்றை உறிஞ்சி கொல்லும் தன்மை உடையவை.

அசுவினி, இலைப்பேன், செதில் பூச்சி, தத்துப்பூச்சி, சிலந்தி, வெள்ளை ஈ.,பச்சைக்காய் புழு, புகையிலை வெட்டுப்புழு, புள்ளிக்காய்புழு, இளஞ்சிவப்பு காய்புழு, பைரில்லா, மாவுப்பூச்சி ஆகிய பூச்சிகளை கட்டுப்படுத்தும். ஒரு ஏக்கருக்கு ஒரு முறைக்கு 20 ஆயிரம் முட்டைகள் அல்லது புழுக்கள், காலை அல்லது மாலை வேளைகளில் விடவும். விடும்முன்போ அல்லது விட்ட பின்போ ஒரு வாரத்துக்கு பூச்சிக்கொல்லிகள் தெளிப்பதை தவிர்க்கவும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**நெற்பயிரை தாக்கும் பூஞ்சை நோய்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:09 IST

வெள்ளகோவில் : தொடர் மழை பெய்து வருவதால், குலைநோய், பூஞ்சை நோய் நெற்பயிரை தாக்கும் வாய்ப்புள்ளது. நிலங்களில் அதிகளவு மழைநீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நோய் அறிகுறி இருந்தால் வேளாண் துறைக்கு தெரிவிக்குமாறு இத்துறையினர் அறிவுறுத்துகின்றனர்.

வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது: வெள்ளகோவில், மூலனூர், முத்தூர் பகுதிகளில் அதிகளவு நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது பெய்து வரும் தொடர் மழையால், பூஞ்சை நோய் தாக்க வாய்ப்புள்ளது. இரவில் பனி; பகலில் மழை என்ற சீதோஷ்ண நிலையால், சூரிய ஒளி சிறிதும் நெற்பயிருக்கு கிடைக்காமல் போகிறது; ஈரப்பதம் அதிகமாகிறது. இதனால், குலை நோய், பூஞ்சாண நோய் ஏற்பட்டு, பயிர் வளர்ச்சி மற்றும் மகசூலில் பாதிப்பு ஏற்படுத்துகிறது.மழைக்காலத்தில் ஐ.ஆர்-20, கோ-43, ஆடுதுறை ரகங்களை பயிரிடுவது சிறந்தது. இவற்றில், நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். ஆனால், அதிக சதைப்பற்று எதிர்பார்க்கும் விவசாயிகள் பலர், டீலக்ஸ் பொன்னி போன்ற, வேளாண் துறை பரிந்துரைக்கும் ரகங் களை பயிரிடுகின்றனர். இதுபோன்று பயிரிடும் போது, தொடர் மழைக்காலங்களில் நஷ்டமடைய நேரிடுகிறது.

நோய் தாக்கம் தெரியவந்தால், டைத்தேன், பெவிஸ்டின் மருந்துகளை கலந்து தெளிப்பது பலன் தரும். ஆனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில், நோய் தாக்கும் பூச்சிகளை அழிக்கும் நன்மை தரும் பூச்சிகளும் இறந்து விடும். எனவே, தேவைப்பட்டால் மட்டும் மருந்து தெளிப்பது நல்லது.  மேலும், வயலில் அதிக நீர் தேங்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; 10 அங்குல உயரத்துக்கு மேல் நீர் தேங்கினால் வேர் அழுகல் ஏற்படவும் வாய்ப்புள்ளது, என்றார்.

**உரித்த தேங்காயை அரசே நேரடி கொள்முதல் செய்ய வேண்டும் : தென்னை நலவாரிய தலைவர் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:12 IST

உடுமலை : "உரித்த தேங்காயை விவசாயிகளிடமிருந்து அரசே நேரடியாக கொள்முதல் செய்யும் திட்டம் நல வாரியத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டு விரைவில் செயல்படுத்தப்படும் வாய்ப்பு உள்ளது', என தென்னை விவசாயிகள் நல வாரிய தலைவர் ராஜ்குமார் மன்றாடியார் பேசினார். உடுமலையில், தென்னை விவசாயிகள் நல வாரியம் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது.

இதில் தென்னை விவசாயிகள் நல வாரிய தலைவர் ராஜ்குமார் மன்றாடியார் தலைமை வகித்து பேசியதாவது: தமிழ்நாட்டில் தற்போது 18.20 கோடி தென்னை மரங்கள் உள்ளன. ஆரோக்கியமான தேங்காய் எண்ணெய் பயன்பாட்டை குறைக்க அமெரிக்காவை சேர்ந்த சோயா உற்பத்தியாளர்கள் தேங்காய் எண்ணெய் கொழுப்பு சத்து மிக்கது; உடல் நலத்திற்கு தீங்கானது என பொய் பிரசாரம் செய்துள்ளனர். மதிய உணவு திட்டத்தில், மாணவர்களுக்கு 2 கிராம் தேங்காய் எண்ணெய் வழங்கினால், மாதத்திற்கு 28 ஆயிரம் டன்னும், ஒரு கோடியே 96 லட்சம் ரேஷன்கார்டுகளுக்கு அட்டைக்கு தலா ஒரு கிலோ எண்ணெய் வழங்கினால் 19 லட்சத்து 60 ஆயிரம் டன் எண்ணெய் தேவைப்படும். இதனால், தேங்காய்க்கு நிரந்தர விலை கிடைக்கும்.

கேரளாவில், உரித்த தேங்காயை நேரடியாக விவசாயிகளிடமிருந்து அரசு கொள்முதல் செய்யும் திட்டம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலும் செயல்படுத்த வாரியத்தின் மூலம் அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்பாட்டிற்கு வரும் வாய்ப்புள்ளது. கொப்பரைக்கு நல்ல விலை இருக்கும் போதும், இடைதரகர், அதிகாரிகள் சிண்டிகேட்டால் விவசாயிக்கு விலை கிடைப்பதில்லை. தாலுகாக்களில் இரண்டு கொப்பரை கொள்முதல் மையம் அமைக்க வேண்டும்.

உழவர் சந்தைகளில் தென்னை விவசாயிகளுக்கு தனிக்கடை, கோவிலுக்கு தேங்காய் நேரடி கொள்முதல் , நியாய விலைக்கடை விற்பனை, அரசு விழாக்களில் இளநீர் பயன்பாடு போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்படும். தொழிற்சாலைகள் கலப்படத்தில் ஈடுபடுவதால், தேங்காய் எண்ணெய் மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்படுகிறது. தரமில்லாத கொப்பரைகளை பயன்படுத்தி, கலப்பட எண்ணெய் தயாரிக்கும் நிறுவனங்களில் ஆய்வு செய்து சீல் வைக்கப்படும். இலங்கையிலிருந்து புண்ணாக்கை இறக்குமதி செய்து எண்ணெய் பிழிவதை தடை செய்ய வேண்டும். தென்னை சார்ந்த தொழில்களையும், தேவையான உதவிகளையும் அரசிடம்

கேட்டுப்பெற்றால்  வருமானத்திற்காக "கள்' இறக்குவதற்கான தேவை தென்னை விவசாயிகளுக்கு ஏற்படாது. இவ்வாறு அவர் பேசினார்.

விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க மாநில தலைவர் வேலாயுதம் கூறியதாவது: மத்திய அரசு வரி இல்லாமல் சமையல் எண்ணெய்யை 2009 நவம்பரிலிருந்து  2010 அக்டோபர் வரை 92.4 லட்சம் டன் இறக்குமதி செய்துள்ளது.38 ஆயிரம் கோடிக்கு, கிலோ ரூ. 41.20 வீதம் இறக்குமதி செய்ததால் உள்நாட்டில் தேங்காய்க்கு விலை கிடைக்கவில்லை. ஐம்பது சதவீதம் பற்றாக்குறை என்ற பெயரில் இறக்குமதியாளர்களுக்கும், வெளிநாட்டு பாமாயில் விவசாயிகளுக்கும் மறைமுக உதவியை அரசு புரிகிறது. இந்தியாவின் தற்போதைய சமையல் எண்ணெய் தேவை 1.47 லட்சம் டன்னாக உள்ளது. 2015 ம் ஆண்டு தேவை 2 லட்சம் டன்னாக உயரும் வாய்ப்புள்ளது. தமிழக அரசு மத்திய அரசின் தவறான நடவடிக்கையை ஊக்குவிக்கும் வகையில், மாநிலத்திற்கு நூறு கோடி ரூபாய் மதிப்பிலான 19 ஆயிரம் டன் எண்ணெய்யை மத்திய அரசின் எண்ணெய் தொகுப்பில் வாங்கி வினியோகிக்கிறது. இதனால், தென்னை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.
இந்நிலையில், இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் துசில் கோயங்கா வரும் ஆண்டில் 95 லட்சம் டன் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார். இதனால், உள்நாட்டில் உற்பத்தியாகும் தேங்காய்க்கு விலை முற்றிலுமாக குறையும்.

கொப்பரை விலை உயர்ந்தாலும் தேங்காயின் விலை சராசரியாக மூன்று ரூபாயை தாண்டுவதில்லை. தென்னை சாகுபடி சார்ந்த விவசாயிகள், தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க சமையல் எண்ணெய் இறக்குமதியை மத்திய அரசு தடை செய்ய மாநில அரசு வலியுறுத்த வேண்டும் என்றார். தென்னை விவசாயிகள் நல வாரிய நிர்வாகிகள், தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**மக்காச்சோளம் விற்பனைஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் ஜோர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,02:19 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக வளாகம் மற்றும் அலுவலகத்தில் மக்காச்சோள கதிர் வியாபாரம் தாராளமாக நடந்து வருகிறது.தர்மபுரி கலெக்டர் அலுவலக வளாகத்தின் பின் பகுதியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் அலுவலகம் உள்ளது. அலுவலக நேரத்தில் பெண் வியாபாரிகள் தாராளமாக அவித்த மக்காச்சோள கதிர் விற்பனை செய்து வருகின்றனர். மாடியில் உள்ள திட்ட அலுவலர் அலுவலகத்தின் வராண்டாவில்

நின்றும், அலுவலக நுழைவு வாயில் பகுதியில் நின்றும் பெண் வியாபாரி மக்காச்சோள கதிர் விற்பனை செய்து வருகின்றனர்.

அலுவலக ஊழியர்கள் முதல் அலுவலக பணிக்கு வரும் பொதுமக்கள் வரையில் மக்காச்சோளத்தை விரும்பி வாங்கி செல்கின்றனர். நேற்று முன்தினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட பஞ்சாயத்து குழு கூட்டம் நடந்த போதும், வெளியில் மக்காச்சோளம் விற்பனை ஜோராக நடந்தது. அலுவலக ஊழியர்கள் முதல் யாரும் இதை கண்டு கொள்ளவில்லை. அலுவலக வளாகத்தில் இது போன்ற விற்பனையால், அலுவலர்களின் பணிகள் பாதிக்கும் நிலையுள்ளது.

## 3,000 ஹெக்டர் நெல், 5,845 ஹெக்டர் பருத்தி பாதிப்பு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,02:15 IST

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் பெய்த தொடர் மழையில், 3,000 ஹேக்டர் நெல் பயிர், 5,845 ஹேக்டர் பருத்தி பயிர் நீரில் மூழ்கின. சேதமதிப்பு கணக்கெடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும், மோட்டார் பழுதுக்கு 5,000 ரூபாயும் நிவாரணம் வழங்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து, வாரத்துக்கும் மேலாக வெளுத்து வாங்கியது. திருச்சி மாவட்டத்தில் பரவலாக பெய்த மழையில், அரியாறு ஆற்றுக் கோட்டத்தில் உள்ள 112 ஏரிகள், கோரையாற்றுப் பாசன கோட்டத்தில் உள்ள 76 குளங்களில், நீர்மட்டம் மளமளவென உயர்ந்தது.

பல ஏரி, குளம் நிரம்பின. காவிரியில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. முக்கொம்பிலிருந்து காவிரி, கொள்ளிடத்தில் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கடந்த இரண்டு நாட்களாக மழை நின்றது. எனினும், முழுமையாக வெயில் காணப்படவில்லை. தொடர் மழையில், திருச்சி மாவட்டம் முழுவதும் 15க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்தும், மரங்கள் சாய்ந்தும் பாதிப்பு ஏற்பட்டது. திருவெறும்பூர் யூனியனில், அரசங்குடி, வேங்கூர், குவளக்குடி, பத்தாளப்பேட்டை, நடராசபுரம், விளாங்குளம், அசூர், பொய்கைக்குடி, கிளியூர் உள்ளிட்டப் பகுதிகள். லால்குடி யூனியனில், அன்பில், திண்ணியம், ஆலங்குடி மகாஜனம், நெருஞ்சாடிக்குடி, கீழப்பெருங்காவூர், பெருமங்களம், வாளாடி உள்ளிட்ட பகுதிகள். இதுதவிர மண்ணச்சநல்லூர், கோவத்தக்குடி, தழுதாளப்பட்டி உள்ளிட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கின.

புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், துறையூர் யூனியன் பகுதிகளில் சாகுபடி பருத்தி பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது சேதமதிப்பு கணக்கெடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. திருச்சி மாவட்ட வேளாண் துறை இணை இயக்குநர் சேகர் கூறுகையில், ""திருச்சி மாவட்டத்தில்

3,000 ஹெக்டர் நெல், 5,845 ஹெக்டர் பருத்தி பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன. தற்போது மழைநீர் வடிந்து வருகிறது. இவற்றில், முழுமையான அழுகிய பயிர்கள், பகுதி பாதித்த பயிர்கள், மழைநீரை தாங்கி நன்றாக உள்ள பயிர்கள் குறித்து ஆய்வு செய்து வருகிறோம். இதன் அடிப்படையில் சேதமதிப்பு கணக்கெடுப்பு பணி தீவரமாக நடந்து வருகிறது. ஓரிரு நாட்களில் சேதமதிப்பு இறுதி செய்யப்படும். நிவாரணம் குறித்து அரசு முடிவெடுக்கும்," என்றார். பாரதீய கிசான் சங்கப் பொதுச்செயலாளர் அய்யாக்கண்ணு கூறுகையில், ""மழைவெள்ள பாதிப்பில் பயிர்கள் ஒருபுறம் பாதிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் பல இடங்களில் மின் மோட்டாரில் நீர் புகுந்து பழுதாகியுள்ளது. கிணறுகள் இடிந்துள்ளது. இவற்றை பழுதுநீக்க, சீரமைக்க முறையே 5,000 ரூபாயும், பயிர் சேதத்துக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்க வேண்டும்," என்றார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவெறும்பூர் ஒன்றிய செயலாளர் நடராஜன் கூறுகையில், ""பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்து வேளாண் துறையினர் உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும். ஏக்கருக்கு குறைந்தது 12 ஆயிரம் ரூபாய் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். பழுதான சாலைகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

**மழையால் ஒழிந்தது மாவுப்பூச்சிபட்டுக்கூடு விலை உயர வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:56 IST

கோபிசெட்டிபாளையம்:கோபி வட்டாரத்தில் பெய்த தொடர்மழையால் மாவுப்பூச்சி தாக்குதல் முற்றிலும் குறைந்துள்ளது. தரமான மல்பெரி உற்பத்தியாகி, பட்டுக்கூடு விலை மீண்டும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோபி வட்டாரத்தில் பட்டுக்கூடு வளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது. இங்கிருந்து, தர்மபுரி, கோவை மற்றும் கர்நாடகா மாநிலம் ராமன் நகர் பட்டு மார்க்கெட்டுக்கு, பட்டுக்கூடுகள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. மார்ச் மாதம் முதல் கோபி, சத்தி மற்றும் பவானி பகுதிகளில் ஏற்பட்ட மாவுப்பூச்சி தாக்குதலால், மல்பெரி உற்பத்தி பாதித்தது. அதன் தரமும் குறைந்தது. அதை உட்கொள்ளும் பட்டுபூச்சிகள் உற்பத்தி செய்த பட்டுக்கூடுகளும் தரமில்லாமல் இருந்தன. தொடர் மழை காரணமாக ஏற்பட்ட குளிர்ந்த சீதோஷ்ண நிலையால், "மூத்திரக்கூடு' என, அழைக்கப்படும் தரம் குறைந்த பட்டுக்கூடுகள் உற்பத்தியாகின. கிலோவுக்கு 100 ரூபாய் கூட விலை கிடைக்கவில்லை.

அக்டோபர் மாதம், முதல் தர மஞ்சள் பட்டுக்கூடு கிலோ 256 ரூபாய் வரையும், வெள்ளைக் கூடு 356 ரூபாய் வரையும் விலை கிடைத்தது. ஆனால், தரமான பட்டுக்கூடுகளை விவசாயிகளால் உற்பத்தி செய்ய முடியவில்லை. நேற்று முன்தின் தர்மபுரி மார்க்கெட்டில் மஞ்சள் கூடுக்கு அதிகபட்சமாக 235 ரூபாய், குறைந்தபட்சமாக 147 ரூபாய் கிடைத்தது. கோவை மார்க்கெட்டில்

வெள்ளை கூடு அதிகபட்சமாக 255 ரூபாய், குறைந்தபட்சமாக 145 ரூபாய் மட்டுமே கிடைத்தது. சென்ற மாதத்தை விட 100 ரூபாய் வரை விலை குறைந்திருந்தது.கோபி பகுதியில் பெய்த தொடர் மழையால் மாவுப்பூச்சி தாக்குதல் முற்றிலும் குறைந்துள்ளது. இனி, தரமான மல்பெரி இலை உற்பத்தியாகும். மேலும் வெயில் அடிக்க துவங்கியுள்ளதால், மூத்திர பட்டுக்கூடு உற்பத்தி குறைந்து, தரமான பட்டுக்கூடுகள் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது. வரும் நாட்களில் கோபி பகுதிகளில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுக்கு மார்க்கெட்டில் அதிக விலை கிடைக்கும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்பனைமாவட்ட பஞ்., கூட்டத்தில் ம.தி.மு.க., கவுன்சிலர் புகார்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,02:11 IST

தர்மபுரி: ""தர்மபுரியில் உரக்கடைகளில் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுகிறது,'' என ம.தி.மு.க., மாவட்ட கவுன்சிலர் மாவட்ட பஞ்சாயத்து கூட்டத்தில் புகார் தெரிவித்தார்.தர்மபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வெங்கடேஸ்வரன் தலைமையில் சாதாரண கூட்டம் நடந்தது. திட்ட அலுவலர் ரவிச்சந்திரன், செயலர் ஜானகிராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்ட துவக்கத்தில் வேளாண், தோட்டக்கலை துறை, வேளாண் பொறியியல் துறை சார்பில் அரசின் மானிய திட்டங்கள் குறித்தும், திட்ட நடைமுறை குறித்தும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:மாவட்ட கவுன்சிலர் ராஜா (ம.தி.மு.க.,): தர்மபுரி மாவட்டத்தில் விதை நெல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வேளாண் துறையில் கேட்டால், விதை நெல் கிடைப்பதில்லை.வேளாண் இணை இயக்குனர் துரைசாமி: தர்மபுரி மாவட்டத்துக்கு 230 டன் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டிருந்தது. விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப இருப்பு வைக்கப்பட்ட விதை நெல் அனைத்தும்மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் விவசாயிகள் கேட்டால், வெளியில் இருந்து விதை நெல் வாங்கி கொடுக்கவும் நடவவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.ராஜா: மானிய விலையில் வழங்கப்படும் உரங்களுக்கு விவசாயிகளிடம் கூடுதல் விலை வசூலிக்கப்படுகிறது. தர்மபுரியில் உள்ள பல உரக்கடைகளில் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயத்துறையில் உள்ள மானியங்கள் குறித்து கிராம பகுதி விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு செய்திடவேண்டும்.வேளாண் இணை இயக்குனர் துரைசாமி: கூடுதல்

விலைக்கு உரங்கள் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து கடைகளில் திடீர் ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

வேளாண் துறை மானிய திட்டங்கள் குறித்து கிராம பகுதி விவசாயிகள் அறியும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வெங்கடேஸ்வரன்: தர்மபுரி மாவட்டத்தில் பல ஆண்டுக்கு பின் நல்ல மழை பெய்துள்ளது. இதனால், விவசாய பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. விவசாயிகளுக்கு தேவையான நெல், உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.மாவட்டத்தில் மழையால் விவசாய பயிர்கள் சேதம் அடைந்துள்ளது. அதை ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.மாவட்ட கவுன்சிலர் சாக்கன் சர்மா (விடுதலை சிறுத்தைகள் கட்சி): நீர் வடி நில திட்டத்தில் பணிகள் எப்படி நடக்கிறது. டெண்டர் மூலமாக நடக்கிறதா? அல்லது விவசாயிகள் மூலம் நடக்கிறதா?வேளாண் பொறியியல் துறை இணை இயக்குனர் (பொ) முருகேசன்: அந்தந்த பகுதி பாசன விவசாயிகள் சங்கம் மூலமாக பணிகள் நடந்து வருகிறது.சாக்கன்சர்மா: விவசாயிகள் சங்கம் மூலம் நடப்பதாக தெரியவில்லை.மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வெங்கடேஸ்வரன்: அந்தந்த பகுதியில் உள்ள தி.மு.க., ஒன்றிய செயலாளர்கள் மூலம் பணிகள் நடந்து வருகிறது.இதற்கு தி.மு.க., மாவட்ட கவுன்சிலர் தமிழ்செல்வி கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

தமிழ்செல்வி (தி.மு.க.,): நிலைக்குழு அமைக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகிறது. நிலைக்குழுவுக்கு எந்த அதிகாரமும் இல்லை. மாவட்டத்தில் நடக்கும் ஆய்வு கூட்டங்களுக்கு கூட நிலை குழு உறுப்பினர்கள் அழைக்கப்படுவதில்லை. இதனால், ரேஷன் முதல் பல்வேறு மக்கள் பிரச்னைகள் குறித்த புகார்களையும், தவறுகளையும் சுட்டிக்காட்ட முடியாத நிலையுள்ளது.இவ்வாறு விவாதம் நடந்தது.மாவட்ட கவுன்சிலர்கள் ஆறுமுகம், தனகோடி, சரஸ்வதி, அமுதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**துவங்கியது நெல் அறுவடை இயந்திரங்களுக்கு கடும் கிராக்கி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,23:40 IST

பேரம்பாக்கம் திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாய கூலி வேலைக்கு ஆட்கள் இல்லாத நிலையில், அறுவடை இயந்திரங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.திருவள்ளூர் மாவட்டத்தில் முக்கிய தொழில் விவசாயம். இப்பகுதியில் கரும்பு, நெல் போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. கடம்பத்தூர், பேரம்பாக்கம், மப்பேடு, திருவாலங்காடு உட்பட பல பகுதிகளில் அதிகளவில் நெல்

பயிரிடப்படுகிறது.பயிரிடுவதற்கும், களை எடுப்பதற்கும், அறுவடை செய்வதற்கும் தற்போது ஆட்கள் பற்றாக்குறை உள்ளது. ஆட்களை தேடி அலைந்து கிடைக்காமல் வெறுத்துப்போன பலர், தங்களது நிலங்களை "பிளாட்' போட்டு விற்பனை செய்து, சென்னை போன்ற பெருநகரங்களில் "செட்டில்' ஆகி வருகின்றனர்.விவசாயம் செய்து வரும் ஒரு சிலரும் கூலியாட்கள் தட்டுப்பாட்டால் இயந்திரங்களின் உதவியை நாடி வருகின்றனர். டயர் உள்ள இயந்திரத்தில் அறுவடை செய்வதற்கு ஒரு மணி நேரத்திற்கு 750 ரூபாய் முதல் பெறுகின்றனர்.தற்போது "டிமாண்ட்' காலங்களில் இயந்திரங்கள் தட்டுப்பாட்டால் 900 முதல் 1,000 ரூபாய் வரை கொடுக்க வேண்டியுள்ளது.

பெல்ட் உள்ள இயந்திரத்தில் அறுவடை செய்ய ஒரு மணி நேரத்திற்கு 1,750 ரூபாய் வரை கொடுக்க வேண்டியுள்ளது.நெற்கதிர்களை அறுவடை செய்வதற்காக, இம்மாவட்டத்தில் 400க்கும் மேற்பட்ட அறுவடை இயந்திரங்கள் உள்ளன. இந்த இயந்திரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் வேலூர், சேலம், திருச்சி போன்ற வெளிமாவட்டங்களில் இருந்து இயந்திரங்கள் வந்துள்ளன.திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை துவங்கியுள்ளதால், அறுவடை இயந்திரங்களுக்கு கிராக்கி ஏற்பட் டுள்ளது. ஆட்களை பயன்படுத்தி கிராமப்புற பாடல்களை பாடிக்கொண்டு அறுவடை செய்யும் காலம் போய், இயந்திரங்கள் மூலம் தற்போது விவசாயிகள் அறுவடை செய்து வருகின்றனர்.

**தோட்டக்கலை துறை பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,21:41 IST

விழுப்புரம் : கோலியனூர் ஒன்றிய தோட்டக்கலை துறை சார்பில் ஊராட்சித் தலைவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. கோலியனூர் வேளாண் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு தோட் டக்கலை உதவி இயக்குனர் வீராசாமி தலைமை தாங்கினார். உதவி தோட்டக்கலை அலுவலர் பரமசிவம் வரவேற்றார். ஒன்றிய சேர்மன் பிரசன்னதேவி செல்வகுமார் பயிற் சியை துவக்கி வைத்து, விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங் கினார். திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் ரேணுகாதேவி. கலெக் டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சக் கரவர்த்தி, பாரதி கிசான் நிறுவனத்தின் தலைவர் ராமமூர்த்தி உள்ளிட்டோர் பேசினர். ஓசோன் பாதுகாப்பு இயக்க தலைவர் ராமன் இலவச மரக்கன்றுகளை வழங்கினார். பயிற்சியில் பங் கேற்றவர்களுக்கு 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இடுபொருட்கள் மற் றும் விதைகள் வழங் கப் பட்டன.உதவி தோட்டக் கலை அலுவலர் ரமேஷ் நன்றி கூறினார்.

# பட்டுப்புழு வளர்ப்பில் நவீனதொழில் நுட்பம் குறித்து அறிவுரை

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,01:29 IST

ஓசூர்: ""பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால் அதிக வருவாய் ஈட்டலாம், " என, பட்டு வளர்ச்சி இயக்குனர் பிரபாகரன் தெரிவித்து உள்ளார்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அதிகளவு பட்டுப்புழு வளர்ப்பு தொழில் மற்றும் மல்பரி சாகுபடி நடக்கிறது. தேன்கனிக்கோட்டை பகுதியில் பட்டு உற்பத்தியை அதிகப்படுத்த தேவையான நடவடிக்கை குறித்து பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் பிரபாகரன் ஆய்வு செய்தார்.அப்போது, அவர் தேன்தின்னூர் கிராமத்தில் சாகுபடி செய்த மல்பரி தோட்டங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பட்டுப்புழு வளர்ப்பு கூடம் மற்றும் மனைகளை பார்வையிட்டு விவசாயிகளிடம் கலந்துரையாடினார்.

அப்போது அவரிடம் விவசாயிகள். பட்டுப்புழு வளர்ப்பில் உள்ள சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டனர்.அதன்பின் பட்டு வளர்ச்சி இயக்குனர் பிரபாகரன் பேசியதாவது:விவசாயிகள் மல்பரி சாகுபடியில் இணை வரிசை மூலம் நடவு செய்ய வேண்டும். இதனால், திடமான இலை உற்பத்தி செய்யலாம். மல்பரி சாகுபடிக்கு முன் நிலத்தை நன்றாக டிராக்டர் மூலம் உழவு செய்ய வேண்டும். பசும்தாள் உரம், தக்கை பூண்டு, கனப்பை போன்ற தாவரங்களை உரமாக போடுவதின் மூலம் மல்பரி இலை மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.மல்பரி தோட்டம் சுற்றி 10க்கு 10 இடைவெளியில் மேலும் மல்பரி நடவு செய்தால் கூடுதல் வருமானம் பெறலாம். ஒரு செடிக்கு ஒரு முட்டை வீதம் வளர்த்து அதில் அரை கிலோ பட்டுக்கூடு வீதம் உபரியாக உற்பத்தி செய்தால் கூடுதல் வருமானம் பெறலாம்.பட்டுப்புழு வளர்க்கும் மனையில் சரியான சீதோஷ நிலையில் புழுக்களை வளர்க்க "ஹைக்ரோ மீட்டர்', குளிர் காலத்தில் "ஹீட்டர்' வைக்க வேண்டும். இதுபோன்ற பட்டு வளர்ச்சி துறை அறிவுறுத்தும் புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்தினால் இரட்டிப்பு வருமானம் பெறலாம்.இவ்வாறு அவர் பேசினார்.பட்டு வளர்ச்சி துறை இணை இயக்குனர் மோகன், துணை இயக்குனர் கோனப்ப பிள்ளை, தேன்கனிக்கோட்டை உதவி இயக்குனர் முருகன், ஆய்வாளர் பாலரவிக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**காடு வளர்ப்பு திட்டம் :வனத்துறை செயலர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,23:27 IST

பெ.நா.பாளையம் : பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகத்தில் காடு வளர்ப்பு திட்ட செயல்பாடுகளை தமிழக வனத்துறை செயலர் இறையன்பு ஆய்வு செய்தார்.கோவனூர் அருகே காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதை தடுக்க வெட்டப்படும் அகழியை இறையன்பு பார்வையிட்டார். பாலமலையில் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தில் 250 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ள எலந்தை மர வளர்ப்பு பணி மற்றும் தடுப்பணையை பார்வையிட்டார். காட்டு யானைகளை விரட்ட, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நஞ்சன், கார்த்திக் "கும்கி' யானைகளை பார்வையிட்டு, அதன் செயல்பாடுகளை கேட்டறிந்தார்.

பெரியநாயக்கன்பாளையம் விவேகானந்தாபுரத்தில் காட்டு யானை தாக்கி இறந்த பெண்ணின் வீட்டுக்கு சென்றார். அவருடைய கணவர் முருகனுக்கு ஆறுதல் கூறி, வனத்துறை சார்பில் நஷ்ட ஈடு தொகையாக 1.25 லட்ச ரூபாய்க்கான காசோசலையை வழங்கினார். ஆய்வின் போது மண்டல வனப்பாதுகாவலர் கந்தசாமி, மாவட்ட வன அலுவலர் திருநாவுக்கரசு, வனக்குழு தலைவர் அறிவரசு, பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகர் பன்னீர் செல்வம் உடன் இருந்தனர்.

**வெள்ளகோவில் சுற்றுப்பகுதியில் செம்மறி ஆடு வளர்ப்பு அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,23:57 IST

வெள்ளகோவில் : வளர்ப்பது எளிது, நோய் தாக்கம் குறைவு உள்ளிட்ட காரணங்களால், வெள்ளகோவில் பகுதியில் அதிகமானோர் செம்மறி ஆடு வளர்ப்பில் ஆர்வம் காட்டத்துவங்கியுள்ளனர். சிறந்த பராமரிப்பு மற்றும் விழிப்புணர்வு இருந்தால், நோய் தாக்கத்தில் இருந்து ஆடுகளை பாதுகாக்கலாம் என்கிறது, கால்நடைத்துறை.
கால்நடைத்துறையினர் கூறியதாவது: வெள்ளகோவிலில் பச்சாபாளையம், ஓலப்பாளையம் பகுதிகளில் மட்டும் 2,000க்கும் அதிகமான செம்மறி ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. வெள்ளாடு, மேச்சேரி ஆடுகளை அதிகளவில் வளர்ப்பது கடினம். ஆனால், செம்மறி ஆடுகள் அப்படியல்ல; புல்வெளியில் விட்டுவிட்டால் போதும்; எவ்வித சலசலப்பும் இன்றி மேய்ச்சலில் ஈடுபடும். இதனால், முதியோர் கூட இந்த ஆடுகளை எளிதாக மேய்ச்சலுக்கு ஓட்டிச்செல்ல முடியும்.

செம்மறி ஆடுகள் ஆண்டுக்கு இரண்டு குட்டிகள் ஈன்றெடுக்கின்றன. குட்டிகளுக்கு ரூ.2,500 முதல் 3,000 வரை கிடைக்கிறது. இதுபோன்ற காரணங்களால் செம்மறி ஆடு வளர்ப்பில் அதிகமானோர்

ஈடுபடத் துவங்கியுள்ளனர். ஆடு வளர்ப்போர் பண்ணைகளை சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியம். மழைக்காலங்களில், பூட்டாக்ஸ் மருந்தை 20 லிட்டர் தண்ணீருக்கு 16 மில்லி என்ற அளவில் கலந்து பண்ணையை சுற்றி தெளிக்க வேண்டும். இதனால், நோய் கிருமிகள் தாக்குதலில் இருந்து ஆடுகளை பாதுகாக்கலாம்.

செம்மறி ஆடுகளுக்கு ஆண்டுக்கு இரண்டு முறை குடற்புழு நீக்கம்; ஆட்டு அம்மை, ஆந்த்ராக்ஸ், நீலநாக்கு நோய்களுக்கான தடுப்பூசிகளை போட வேண்டும். செம்மறி ஆட்டில் நீலநாக்கு நோய் மிக முக்கிய நோயாக உள்ளது. இந்நோய் தாக்கிய ஆட்டின் வாயில் புண் ஏற்பட்டு, தீவனம் உண்ண மறுத்து, தனியே சென்று படுத்துக் கொள்ளும். நாளடைவில் நோய் தாக்கம் அதிகமாகும்போது ஆடு இறந்து விடவும் வாய்ப்புள்ளது. நோய் தாக்கம் இருப்பின், அறிகுறி தெரிந்ததும் கால்நடைத்துறையை அணுக வேண்டும். மேலும், பனி மற்றும் மழைக்காலங்களில் ஆட்டு பட்டியில் தார்ப்பாய் பயன்படுத்துவது சிறந்தது. ஏனெனில், ஆடுகளின் மீது பனி விழும்போது, குளிர் காய்ச்சல் உள்ளிட்ட வைரஸ் நோய் ஏற்படக்கூடும். சரியான பாதுகாப்பு முறையை மேற்கொண்டால் ஆட்டுக்கு ஏற்படும் நோய்களை தவிர்த்து, அதிக லாபம் பெற முடியும், என்றனர்.

**சாதனை படைத்த மல்லிகை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,23:43 IST

மதுரை: மதுரையில் கார்த்திகை மாதத்தில், இதுவரை இல்லாத அளவிற்கு மல்லிகை வரத்து அதிகரித்துள்ளதால், விலை சீராக உள்ளது. மாட்டுத்தாவணி பூ மார்க்கெட் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறியதாவது: இன்னும் இரு வாரங்களில் பனி சீசன் ஆரம்பிக்க உள்ளதால், மல்லிகை உற்பத்தி குறைந்து விலை அதிகரிக்கும். நேற்று ஒரு கிலோ 150-120 ரூபாய், அரளி 200, செவ்வந்தி 30-60, கேந்தி 50, வாடாமல்லி 50, கோழிகொண்டை 60, பிச்சிப்பூ 150, மெட்ராஸ் மல்லி 120, கனகாம்பரம் 600, ரோஸ் 60, சம்பங்கி 40-50 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார்.

**பத்து நாளில் காய்கறி விலை குறையும்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,23:43 IST

மதுரை: தொடர் மழையால், காய்கறி உற்பத்தி குறைந்துள்ளதாலும், ஐயப்ப சீசன் காரணமாகவும் கடந்த வாரம் மதுரை மாட்டுத்தாவணி மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து குறைந்து, விலை

அதிகரித்தது.  ""இந்த வாரமும் அதே விலை நீடித்தாலும், பத்து நாளில் வரத்து  அதிகரித்து விலை குறையும்," என்கிறார் சங்கத் தலைவர் பி.எஸ். முருகன்.  காய்கறி விலை குறித்து, அவர் கூறியதாவது : நேற்று ஒரு கிலோ தக்காளி 12 ரூபாய், உருட்டு தக்காளி 10, கத்தரிக்காய் 35, வெள்ளை கத்தரிக்காய் 20, பூசணிக்காய் 5, வெண்டைக்காய் 20, புடலைங்காய் 20, சுரைக்காய் 7, கேரட் 20, பீட்ரூட் 15, முள்ளங்கி 12, நூக்கல் 18, உருளைகிழங்கு 20-25, சேனைகிழங்கு 25, கருணைகிழங்கு 25, வெங்காயம் 25-30, பாகற்காய் 20, சிறியது 50, இஞ்சி 30, பீன்ஸ் 30, பட்டர் பீன்ஸ் 50, சோயா பீன்ஸ் 40, பட்டாணி 100, முட்டைகோஸ் 10, காலிபிளவர் 4-7, முருங்கைக்காய் 20, சவ்சவ் 15, கீரை வகைகள் 10, புதினா 9, கொத்தமல்லி 20, கறிவேப்பிலை 15, அவரைக்காய் 30, கொத்தவரை 10, பீர்க்கங்காய் 15 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார். மாட்டுத்தாவணி மார்க்கெட் காய்கறி விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**கடலை எண்ணெய் டின்னுக்கு ரூ.50 உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,23:41 IST

மதுரை: நிலக்கடலை பருப்பு உற்பத்தி குறைவால், மதுரையில் கடலை எண்ணெய் விலை டின்னுக்கு (15 கிலோ) 50 ரூபாய் அதிகரித்துள்ளது.  கடந்த வாரம் 1160 ரூபாய்க்கு விற்ற டின், நேற்று 1210 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தேங்காய் உற்பத்தி குறைவால், தேங்காய் எண்ணெய் விலை டின்னுக்கு 40 ரூபாய் அதிகரித்துள்ளது. சங்க நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது : மலேசியா, இந்தோனிஷியாவில் மழை காரணமாக, பாமாயில் உற்பத்தி குறைந்துள்ளது.

இதனால் மதுரையில் கடந்த வாரம் 840 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின், நேற்று 860 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தேங்காய் எண்ணெய் 1360 ரூபாயில் இருந்து 1400 ரூபாய்க்கும், ரைஸ்பிரான் ஆயில் 910 ரூபாயில் இருந்து 920 ரூபாய்க்கும், வனஸ்பதி 930 ரூபாயில் இருந்து 940 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. சூரியகாந்தி எண்ணெய் விலை மட்டும் குறைந்துள்ளது. டின் 1160 ரூபாயில் இருந்து 1140 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நல்லெண்ணெய் 1250 ரூபாய், தும்பை நல்லெண்ணெய் 1700 ரூபாய்  என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் காய்கறி விலை கிடு கிடு உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,22:59 IST

ஒட்டன்சத்திரம்: தொடர் மழை காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டதால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் காய்கறி, வெங்காய விலை கிடு கிடு வென உயர்ந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு திண்டுக்கல் மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் தொடர் மழை பெய்தது. இம்மழையினால் செடிகளில் இருந்த பூக்கள் அனைத்தும் உதிர்ந்து விட்டன. சில செடிகளில் இருந்த பிஞ்சுகள் அழுகின. மழையிலிருந்து தப்பிய காய்கறிகள் நோய் தாக்கப்பட்டு தரமற்றவையாக மாறிவிட்டன. ஒட்டன்சத்திரம் மார்க்கெட் கமிஷன் கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில், ஒரு நாளைக்கு ஆயிரம் பெட்டிகள் தக்காளி வரத்து உள்ள கடையில் 200 பெட்டி தான் வருகிறது.

நாள்தோறும் காய்கறி வரத்து தொடர்ந்து குறைந்து கொண்டே இருப்பதால் வரும் வாரங்களில் காய்கறி விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று தெரிவித்தார். காய்கறி மொத்த விலை விபரம்( ஒரு கிலோ): புடலங்காய்-ரூ.12, சுரைக்காய்-ரூ.5, செடி முருங்கை-ரூ.23, மரம் கரும்பு முருங்கை-ரூ.28, கொத்தவரை-ரூ.15, பீன்ஸ்-15, வெண்டை-6, பூசணி-4, மிளகாய்-ரூ.15, பீட்ரூட்-ரூ.7, வெங்காயம்-ரூ.25-30, தக்காளி (14கிலோ பெட்டி) -ரூ.80, காளிபிளவர் (20பூக்கள் கொண்ட பை)-ரூ.90.இவை அனைத்தும் மொத்த விற்பனை விலையாகும். இதே காய்கறிகள் சில்லரைக்கு புடலங்காய்-ரூ.20, சுரைக்காய்-ரூ.12, செடி முருங்கை-ரூ.50, மர கரும்பு முருங்கை-ரூ.60, கொத்தவரை-ரூ.16, பீன்ஸ்-30, வெண்டை-16, பூசணி-16, மிளகாய்-ரூ.46, பீட்ரூட்-ரூ.16, வெங்காயம்-ரூ.28, தக்காளி (ஒரு கிலோ) -ரூ.16, காலிபிளவர் ஒரு பூ 12 க்கு விற்கப்படுகிறது. மலைக் காய்கறிகளான உருளைக்கிழங்கு, காரட்,முருங்கை பீன்ஸ், சவ்சவ் ஆகியவை மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வரத்தே இல்லை.

**மானியத்தில் வெள்ளை எள் விதைகள் சப்ளை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,22:37 IST

வடமதுரை: வடமதுரை வட்டாரத்தில் மானாவாரி மற்றும் இறவையில் 250 ஏக்கர் பரப்பில் எள் பயிர் சாகுபடி நடக்கிறது. எண்ணெய் சத்து மிகுந்த, கூடுதல் மகசூல் தரும் வெள்ளை எள் விதை சரிவர கிடைக்காததால் அதன் சாகுபடி பரப்பு குறைந்து காணப்படுகிறது. வெள்ளை எள் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கில் எஸ்.வி.பி.ஆர்.1 என்ற ரக வெள்ளை எள் ரக விதைகள் மானியத்தில் வினியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 2 கிலோ விதை

போதுமானது. வயது 85-90 நாட்கள். மானாவாரியில் ஏக்கருக்கு 450 கிலோவும், இறவையில் 650 கிலோவும் மகசூல் தரக்கூடியது. கார்த்திகை, மார்கழி பட்டத்தில் விதைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் உடவே வடமதுரை வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம் என உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**தொடர் மழையால் நெல் வயல்கள் சேதம்: அறுவடை செய்ய முடியாமல் வீணாகிப் போன நெற்கதிர்கள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,22:25 IST

கூடலூர்: கூடலூர், சின்னமனூர் பகுதிகளில் கன மழை காரணமாக அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்கதிர்கள் சாய்ந்து வீணாகிப் போனதால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. கூடலூரில் பெரியாறு மற்றும் ஒட்டான்குளம் கண்மாயை நம்பி மூன்றாயிரம் ஏக்கரில் இரு போக நெல் விவசாயம் செய்யப்படுகிறது. தற்போது முதல் போக நெல் சாகுபடியில் நெற்கதிர்கள் நன்கு விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் இருந்தது. சில பகுதிகளில் மட்டும் அறுவடை முடிந்துள்ளது. இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல் அறுவடை செய்ய இருந்த நேரத்தில் கடந்த ஒரு வாரமாக மாவட்டத்தில் தொடர்ந்து கன மழை பெய்தது.

இதனால் நெல் வயல்களில் அதிகளவு நீர்தேங்கியும், நெற்பயிர்கள் முழுவதும் சாய்ந்தும் வீணாயின. தொடர்ந்து மழை பெய்ததால் சேற்றுடன் சேர்ந்து நெற்பயிர்கள் மூழ்கியிருந்ததால் அறுவடை செய்ய முடியவில்லை. இதனால் விவசாயிகளுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. மழை காரணமாக வயல் முழுவதும் சேறும் சகதியுமாக இருந்ததால், நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தை வயலில் இறக்கி அறுவடை செய்ய முடியவில்லை. அறுவடை செய்ய கூலியாட்களும் கிடைக்காததால் நெற்பயிர் முழுவதையும் வயல்களில் அப்படியே விட்டுள்ளனர்.

தற்போது பாதிக்கப்பட்டதுடன் அடுத்த போகத்திற்கும் தயாராக முடியாலும் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. உத்தமபாளையம்: அம்மாபட்டி பகுதியில் தொடர் மழை காரணமாக 110 ஏக்கர் நெல் வயல் நீரில் மூழ்கியது. சாத்தன்குளம், குப்பிசெட்டிகுளத்தை ஒட்டியுள்ள 45 ஏக்கரில் நீர்தேங்கியுள்ள நிலையில் அறுவடை செய்ய முடியவில்லை. பயிர்கள் முற்றிலும் வீணாகி கதிரில் உள்ள நெல் முளைத்துவிட்டன. இதை வேறு எதற்கும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பெரியார், வைகை பாசன திட்டத்தின்கீழ் தீவிர நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:00 IST



பெரியார், வைகை பாசன திட்டத்தின்கீழ் 1,45,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி நடந்துகொண்டிருக்கின்றது. அனுபவமிக்க விவசாயிகள் நெல் ரகத்தின் விளைச்சல் திறனைக் கருத்தில் கொண்டு அமோக மகசூலினை அள்ளித்தரும் உயர் விளைச்சல் நெல் ரகங்களான ஆடுதுறை 45, ஆடுதுறை 36 மற்றும் அம்பை 16 (பெருவெட்டு நெல்) இவைகளை தேர்ந்தெடுத்துள்ளனர். விவசாயிகளது மதிநுட்பத்தினை பாராட்ட வேண்டும். இந்த ரகங்களை கார்த்திகை பட்டத்திலும் விவசாயிகள் நாற்று விட்டு நட்டுள்ளனர். கார்த்திகை கழிந்து மார்கழி வந்தால் அது கார் பட்டம் என்று தெரியும். இருப்பினும் கார் பட்டத்திலும் இந்த ரகங்கள் நல்ல மகசூலினைத் தரும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் துணிச்சலாக இந்த ரகங்களை சாகுபடி செய்து இருக்கிறார்கள்.

ஆடுதுறை 45 ரகம், ஆடுதுறை 43 ரகத்தைவிட அதிக மகசூலினைத் தருகின்றது. ஆடுதுறை 43 ரகத்திற்கு ஆடுதுறை 45 ரகத்தைவிட அதிக விலை கிடைக்கின்றது. இருந்தாலும் ஆடுதுறை 45 ரகத்தில் லாபம் அதிகம் கிடைக்கின்றது. ஆடுதுறை 45 ரகத்தை வெண் புழுங்கலாக செய்தால் அரிசி பார்ப்பதற்கு மிக நன்றாக உள்ளது. இதன் புழுங்கல் அரிசி மற்ற ரகங்களின் புழுங்கல் அரிசியைவிட அதிக விலைக்குப் போகின்றது. பல விவசாயிகள் ஆடுதுறை 45 ரகத்தை சாகுபடி செய்து, அதில் வெண் புழுங்கல் அரிசி செய்து விற்பனை செய்கிறார்கள். ஏனெனில் நெல்லாக விற்பதைவிட அரிசியாக விற்பது லாபம் பெற்றுத்தருகின்றது. அடுத்து ஆடுதுறை 36 நெல் ரகம் மிக அதிக மகசூலினைக் கொடுப்பதோடு நெல்லுக்கு நல்ல விலையும் பெற்றுத்தருகின்றது. சாகுபடி சமயம் அதிக வயதுடைய நாற்றினை நட்டாலும் இதன் மகசூல் பாதிக்கப்படுவதால் இது

எல்லா சாகுபடி பட்டங்களிலும் ஒரே சீராக வளர்ந்து ஒரே விதமான மகசூலினைக் கொடுக்கின்றது. அடுத்து அம்பை 16 பெருவெட்டு நெல் மிக அதிகமான மகசூலினைக் கொடுத்து காலத்தை வென்ற ரகம் என்று பெயர் பெற்றுள்ளது. இதன் அரிசி இட்லி, தோசை செய்வதற்கு மிகவும் ஏற்றது. இத்தகைய ரகங்களைத் தேர்ந்தெடுத்து விவசாயிகள் சாகுபடியில் ஈடுபட்டு திருந்திய சாகுபடி முறைகளையும் அனுசரித்து வருகின்றனர். எட்டு சென்ட் நாற்றங்காலுக்கு 30 கிலோ தரமான விதையை விதைக்கின்றனர். நாற்றங்காலுக்கு பொடி செய்யப்பட்ட வேப்பம் பிண்ணாக்கு, தொழு உரம் மற்றும் உயிர் உரமாகிய அசோஸ்பைரில்லம் விதையுடன் கலந்து இடுகின்றனர். இதைத் தவிர தனியாகவும் உயிர் உரம் இடுகின்றனர். நாற்றங்கால் கட்டத்தில் பயிர் எதிர்காலத்தில் பூஞ்சாள நோய் வராமல் தடுக்க இவ்வாறு பணி செய்கின்றனர். நடவின்போது 25 நாட்கள் வயதுடைய நாற்றினை நடுகிறார்கள். மண் பரிசோதனை செய்து அதன் சிபாரிசுபடி உரங்கள் இடுகின்றனர். ஏக்கருக்கு 110 கிலோ யூரியா, 35 கிலோ பொட்டாஷ், 20 கிலோ மணிச்சத்து இடுகின்றனர். இதோடு 400 கிராம் (2 பாக்கெட்) உயிர் உரங்கள் இடப்படுகின்றன. பயிருக்கு அடியுரமாக மணிச் சத்தும், பாதியளவு தழைச்சத்து மற்றும் சாம்பல் சத்தினையும் இடுகின்றனர். மீதமுள்ள தழைச்சத்தினை ஒரே தவணையாக இடாமல் பிரித்து இடுகின்றனர். இரண்டாவது சாம்பல் சத்து உரத்தை நடவு நட்ட 30வது நாள் இடுகின்றனர். நடவு செய்வதற்கு முன் பொடி செய்யப்பட்ட ஜிங்க் சல்பேட் 10-12 கிலோ இடுகின்றனர். பூச்சி, பூஞ்சாளங்களை அழிக்க ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை அனுசரிக்கின்றனர். விவசாயிகள் ஏக்கருக்கு மொத்த செலவு ரூ.15,200/- வரை செலவு செய்கின்றனர். சாகுபடி செலவு அதிகமானது தெரிந்தும் சாகுபடி செய்யும் ரகங்கள் எப்படியும் ஓரளவு லாபம் கொடுக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கின்றனர். சாகுபடி செலவின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- ஏக்கர் செலவு ரூ.பை
  விதைநெல் (30 கிலோ) 600.00
  நாற்றங்கால் தயார் செய்ய 600.00
  நடவுக்கு உழவு -
  இரண்டு தடவை 2,500.00
  பரம்படிக்க 300.00
  அடி உரம் 1,200.00
  நாற்று பறிக்க 1,200.00
  நாற்று நடவு செய்ய 1,500.00
  வரப்பு வெட்ட 600.00
  களைக்கொல்லி 600.00
  வேலை ஆள் செலவு 600.00

| | |
|---|---|
| முதல் களையெடுப்பு | 900.00 |
| முதல் மேலுரம் | 550.00 |
| இரண்டாவது களையெடுப்பு | 600.00 |
| இரண்டாவது மேலுரம் | 550.00 |
| மருந்து அடிக்க | 400.00 |
| தண்ணீர் பாய்ச்ச | 1,000.00 |
| அறுவடை கூலி | 1,500.00 |
| மொத்த செலவு | 15,200.00 |

- 
- விவசாயிகள் எல்லா ரகங்களுக்கும் ஒரே செலவு செய்துள்ளது. அநேகமாக ஏக்கரில் 36 மூடை (மூடை 65 கிலோ) மகசூல் கிட்டும் என்று எதிர்பார்க்கின்றனர். (மூடை விலை ரூ.650/-)

ஏக்கரில் வரவு

| | |
|---|---|
| நெல்லில் வருமானம் | 23,400.00 |
| வைக்கோலில் வருமானம் | 1,000.00 |
| மொத்தம் | 24,400.00 |
| சாகுபடி செலவு | 15,200.00 |
| நிகர வருமானம் | 9,200.00 |

விவசாயிகளுக்கு சாகுபடியில் ரூ.10,000 வரை லாபம் கிட்டும் என்று நம்பலாம்.

-எஸ்.எஸ்.நாகராஜன்.

**எலி ஒழிப்பில் இயற்கை உத்திகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:00 IST



எலிகளின் வாழ்க்கை முறை: நன்செய் மற்றும் புன்செய் நிலங்களில் காணப்படும் சிறிய பெருச்சாளிகள் முதுகுப்பகுதி கரும்பழுப்பு நிறத்துடன் சிறிய வாலுடனும் காணப்படும். இவைகளில் கருத்தரிக்கும் காலம் 4 நாட்கள் ஆகும். கருத்தரித்த 22 நாட்களில் 1 முதல் 11 குட்டிகளை ஈனும். எலிக்குட்டியானது பிறந்த 3 மாதத்திற்கு உள்ளாகவே கருத்தரிக்க தயாராகி விடுகிறது. கதிர் முற்றும் மற்றும் அறுவடைக் காலமான அக்டோபர், நவம்பர் மாதங்களில்தான் அதிகமான அளவில் இனச்சேர்க்கை செய்து குட்டிகளை ஈனுகிறது. சராசரியாக ஒரு ஆண்டிற்கு 100 குட்டிகள் வரை இனப்பெருக்கம் இருக்கும்.

***<u>எலி ஒழிப்பு உத்திகள்</u>***

வயல் வெளியில்: ணு பயிர் அறுவடை முடிந்தவுடன் எலி வளைகளை வெட்டி எலிகளை அழிக்கலாம்.

* ஆழமாக உழுவதன் மூலம் எலிவளைகளை அழித்து எலிகளை ஒழிக்கலாம்.
* வயல்களில் குறுகிய வரப்புகளை அமைத்து எலிகள் வளைகளை அமைப்பதை தவிர்க்கலாம்.
* வயல்களுக்கு அருகிலுள்ள புதர்களை அழித்து எலிகள் தங்குவதை தவிர்க்கலாம்.
* வைக்கோல் படப்புகளையும் பருத்தி மார் போன்றவைகளையும் வயல்களுக்கு அருகில் வைக்கக்கூடாது.
* ஆந்தைகள் எலிகளை பிடித்து இரையாக உண்ணும். எனவே, அவைகள் வயல்களில் அமர்ந்து எலிகளை பிடித்து உண்பதற்கு ஏதுவாக "டி' வடிவ குச்சிகளை நட்டு வைக்க வேண்டும்.
* தண்ணீர் அதிகம் பாய்ச்சி வளைக்குள் இருக்கும் எலிகளை மூச்சுத்திணறச் செய்து விரட்டியடிக்கலாம்.
* இரவு வேளைகளில் விளக்குகளை பயன்படுத்தி விளக்கின் வெளிச்சத்தினால் ஓடாமல் நிற்கும் எலிகளை அடித்துக் கொல்லலாம்.
* எலிகளை பாம்புகள் பிடித்துத் திண்பதால் பாம்புகளை அழிப்பதை தவிர்க்கலாம்.
* கிட்டிகள் வைத்து எலிகளை பிடித்து அழிக்கலாம்.
* வாய் அகன்ற பானைகளில் சாணம் கலந்த நீரை நிரப்பி மேற்பரப்பில் சோறு போட்டுவைத்தால் அவற்றை உண்ணவரும் எலிகள் அந்த சாண நீரில் வீழ்ந்து மூழ்கி இறந்துவிடும்.

தொடர்பு: ச.கண்ணையா, வேளாண்மை அலுவலர், பரமக்குடி. 04564-226 915.

-கே.சத்தியபிரபா, உடுமலை.

**நெல்லில் பூச்சிகளற்ற பூச்சி மேலாண்மை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:00 IST



தற்பொழுது இயற்கை விவசாய முறையில் அதிக கவனம் செலுத்தப் படுவதால் ரசாயனமற்ற தாவர வகைப் பூச்சிக்கொல்லிகளையே பயன்படுத்தலாம். ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு முறைகளை பயன்படுத்தி பூச்சிக்கொல்லி மருந்தின் தாக்கத்தை குறைக்கலாம்.

* அறுவடைக்குப் பின் வயலில் எஞ்சியுள்ள தாள்களை சேகரித்து அழிப்பதன் மூலம் குருத்துப்பூச்சி, ஆனைக்கொம்பன் மற்றும் நூற்புழுக்களின் முட்டை, புழுக்கள் மற்றும் கூட்டுப்புழுக்களை அழிக்கலாம்.

* கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணில் இருக்கும் கூட்டுப்புழுக்கள் மற்றும் பூஞ்சாணங்களை வெளிக்கொணர்ந்து சூரிய ஒளி மூலம் அழிக்கலாம்.

* நூற்புழுக்கள் மற்றும் ஆரம்ப காலத்தில் தோன்றும் பூச்சிகளை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கை நன்றாக தூளாக்கி கடைசி உழவின்போது இடவேண்டும்.

* வரப்புகளைச் செதுக்கி களையில்லாமல் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் புகையான், இலைமடக்கு புழு, கதிர்நாவாய் பூச்சி ஆகியவற்றின் மாற்று உறைவிடங்களை அழிக்கலாம்.

* மண் பரிசோதனைப்படி பரிந்துரைக்கப்பட்ட அளவு தழை, மணி, சாம்பல் சத்துக்களை இடவேண்டும். தழைச்சத்து உரத்துடன் வேப்பம்பிண்ணாக்கு சேர்த்து மூன்று அல்லது நான்கு முறை பிரித்திடுவது நல்லது.

* நாற்றங்காலில் படைப்புழுக்கள் தென்பட்டால் வயலில் தண்ணீரைத் தேக்கி வைப்பதன் மூலம் மறைந்திருக்கும் புழுக்களை வெளிக்கொணர்ந்து அழிக்கலாம்.

* கூண்டுப்புழுக்கள் தென்பட்டால் ஒரு கயிறு கொண்டு வரப்பின் இரு புறமும் நின்று பயிரின் மீது

படும்படி இழுப்பதன்மூலம் கூண்டுப்புழுக்களை கீழே விழச்செய்து பின் பொதுவான வடிகாலில் வடித்து புழுக்களை சேகரித்து அழிக்கலாம்.

* நடவின்போது பட்டம் விட்டு நடவு செய்வதன் மூலம் புகையானின் தாக்குதலை குறைக்கலாம்.

* நீர் நிர்வாகத்தில் நிறைந்த கவனம் செலுத்த வேண்டும். புகையான் தாக்குதல் இருந்தால் நீரை வடிப்பது அவசியம்.

* வரப்புகளில் தட்டைப்பயறு, பச்சைப்பயறு போன்ற பயிர்களை பயிரிடுவதன் மூலம் இயற்கை எதிரிகளின் நடமாட்டத்தை அதிகப்படுத்தலாம்.

* விளக்குப்பொறியை 1-2மீ உயரத்திற்கு ஒரு எக்டருக்கு 10 என்ற வீதத்தில் வைத்து குருத்துப்பூச்சி, கதிர் நாவாய் பூச்சி, இலை மடக்குப்புழு, புகையான் மற்றும் தத்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணித்து பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்றலாம்.

* இனக்கவர்ச்சி பொறியை ஒரு எக்டருக்கு 12 என்ற வீதத்தில் வைத்து குருத்துப்பூச்சி மற்றும் இலை மடக்குப்புழுவின் தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

* டிரைகோகிரம்மா ஜப்பானிக்கம் என்னும் முட்டை ஒட்டுண்ணியை நடவு செய்த 25, 40 மற்றும் 55ம் நாட்களில் எக்டருக்கு ஒரு லட்சம் ஒட்டுண்ணி என்ற அளவில் இட்டு குருத்துப்பூச்சியின் முட்டைகளை அழிக்கலாம்.

* இலை சுருட்டுப்புழுக்கள் தாக்குதல் இருக்கும் சமயத்தில் முட்செடிகளின் கிளைகளை பயிரின் மீது படும்படி செய்வதன் மூலம் மடங்கியுள்ள இலைகள் கிழிக்கப்பட்டு உள்ளிருக்கும் புழுக்கள் இயற்கை எதிரிகள் தாக்குதலுக்குள்ளாக ஏதுவாக இருக்கும்.

* பயிர் வளர்ச்சிப்பருவத்தின்போது இரண்டு அல்லது மூன்று அடி உயரத்தில் "டி' வடிவ குச்சிகளை வைப்பதால் பறவைகள் நெற்பயிரில் இருக்கும் பழுக்களை உண்டு சேதத்தை குறைக்கும். இரவு நேரத்தில் ஆந்தைகள் அமர்ந்து வயலில் நடமாடும் எலிகளை பிடித்து உண்பதால் எலிகளால் ஏற்படும் சேதத்தை குறைக்கலாம்.

* சிலந்திகள், ஊசித்தட்டான், நீர்த்தாண்டி, நீர் மிதப்பான், இயர்விக், மிரிட் நாவாய்ப்பூச்சி, பொரிவண்டு, தரைவண்டு, கோனியோசில் குளவிகள், டிரைக்கோகிரம்மா குளவி போன்ற நன்மை செய்யும் பூச்சிகள் இயற்கையிலேயே நெல் வயல்களில் அதிக அளவில் இருக்கும் சமயத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கக்கூடாது.

* பொருளாதார சேதநிலையை கணக்கிட்டு தேவை ஏற்படின் தாவர பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தலாம்.

* 5 சதம் வேப்பம் பருப்பு கரைசல் அல்லது வேப்ப எண்ணெய் 3 சத கரைசலை தெளித்து புகையான், பச்சை தத்துப்பூச்சி, இலை மடக்கு புழு, குருத்துப்புழு, இலைப்பேன்களைக் கட்டுப்படுத்தலாம்.

* மேற்கூறிய முறையில் புங்கம் எண்ணெய் 3 சதம், புங்கம் விதைச்சாறு 5 சதம் கரைசலை தெளித்தும் இலைப்பேன் அசுவிணி மற்றும் படைப்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

சி.விஜயராகவன், ஜட்டா கவிதா மற்றும் அ.வீரமணி,
வேளாண்மை அறிவியல் நிலையம்,ராமநாதபுரம்-623 503.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:00 IST



***தேனீ வளர்ப்பு ஒரு நாள் பயிற்சி:***

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் 6ம் தேதி தேனீ வளர்ப்பு ஒருநாள் பயிற்சி அளிக்கப் படுகிறது. 6ம் தேதி சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறைகளில் அதற்கு அடுத்த நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெயர் பதிவு செய்துகொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 0422-661 1214. மின் அஞ்சல்: entomology@tnau.ac.in. மேலும் விபரங்களுக்கு: பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003.

**இந்திய பயிர் பதனத் தொழில்நுட்பக் கழகம்:**

தஞ்சாவூரில் செயல்பட்டு வரும் மத்திய அரசின் நிலையத்தின் இயக்குனர் அழகுசுந்தரம் தெரிவிப்பது: சுற்றுச்சூழலுக்கு சிறு கேடும் நேராத வகையில், நீடித்த, பாதுகாப்பான உணவு

பதப்படுத்தும் தொழில் நுட்பத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. சூரிய ஒளி, கழிவுப் பொருட்கள் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கும் மின்சாரத்தைக் கொண்டு குறைந்த செலவிலேயே உணவுகளை பதப்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள் இருக்கின்றன. உதாரணமாக நெல்லில் இருந்து எண்ணெய் உள்ளிட்ட பத்துவகையான பொருட்களைத் தயாரிக்கலாம். கேழ்வரகிலிருந்து உலர்த்திய கேழ்வரகு இடியாப்பம் தயாரிக்க முடியும்.
மதிப்புக் கூட்டும்போது அதிக விலை கிடைப்பதுடன் அதிக நாட்கள் வரை வைத்திருந்து விற்க முடியும். தானியங்கள், காய்கறிகள், பழங்கள் என அனைத்து விளைபொருட்களையும் எளிய முறையில் குறைந்த செலவில் பதப்படுத்தும் பயிற்சிகளை வழங்கி வருகிறார்கள். ஆரம்ப கட்டத்தில் சோதனை அடிப்படையில் அங்குள்ள தொழில்நுட்ப கூடங்களையே பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவிக்கிறார் அழகுசுந்தரம். தொடர்புக்கு: இந்திய பயிர் பதனத் தொழில்நுட்பக் கழகம், தஞ்சாவூர். 04362-226 676, 228 155.

**நெல் சாகுபடியாளர்களின் கவனத்திற்கு...**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:00 IST

உங்கள் நெல் பயிர் கதிர்ப்பருவத்தில் உள்ளதா? பயிரில் கதிர் நாவாய்ப்பூச்சி உள்ளதா? என்று காலை நேரத்தில் கவனியுங்கள். குறிப்பாக, உங்கள் பயிர் மற்ற விவசாயிகளின் பயிருக்கு பிந்தி நட்ட பயிர் எனில், நன்கு கண்காணிக்க வேண்டும். கதிர் நாவாய்ப்பூச்சிகள் நீண்ட கால்கள் மற்றும் உணர் கொம்புகளுடன் காணப்படும். உடல் பழுப்பு நிறத்தில் சுமார் இரண்டு செ.மீ. நீளமானது. பூச்சியினைக் கையால் தொட்டால் துர்நாற்றம் வீசும். தீவிர தாக்குதல் உள்ள வயலிலும் துர்நாற்றம் வீசும். இதனைக் கட்டுப்படுத்த லிண்டேன் 1.3 சத தூள் அல்லது மாலத்தியான் ஐந்து சத தூளினை ஏக்கருக்கு பத்து கிலோ வீதம் அதிகாலை நேரத்தில் பனிப்பதத்தில் தூவ வேண்டும். தாக்குதல் அதிகமாக இருந்தால் மானோகுரோட்டோபாஸ் அல்லது மாலத்தியான் திரவ மருந்தினை ஏக்கருக்கு 200 மில்லி வீதம் மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் ஒரு வாரம் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும். மேலும் ஆங்காங்கே வெண்கதிர் தென்பட்டால் டீலக்ஸ் பொன்னி, செல்லப் பொன்னி மற்றும் பால் ஒட்டு பயிரிட்டுள்ளவர்கள் கதிரின் கழுத்துப் பாகத்தினையும் கவனியுங்கள். குலைநோய் தாக்கியிருந்தால் கதிரின் கழுத்துப்பாகம் பழுப்பு நிறமடைந்தும் கதிர் வெண்சாவியாகியும் காணப்படும். தற்போதுள்ள காலை குளிர் மற்றும் அதிக அளவு தழைச்சத்து உரங்கள் இடுதல் கதிர் குலைநோயை ஏற்படுத்தும். கதிர் குலைநோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு டிரைசைக்ளோசோல் 75 டபிள்யூபி 120 கிராம் வீதம் பயிர் முழுவதும் படும்படி தெளிக்க

வேண்டும். மருந்துக்கரைசல் பயிரில் நன்கு படிவதற்காக, சாண்டோவிட், இண்ட்ரான், ஸ்டிக்கால், பைட்டோவிட், அக்ரோவிட் போன்ற திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும்.

-டாக்டர் ந.முருகேசன், பேராசிரியர் மற்றும் தலைவர் பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

**நவீனதொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 01,2010,00:00 IST

***களர், உவர் மண்ணுக்கேற்ற நெல் ரகங்கள்***

திருச்சி 1 - ஐ.ஆர்.172 -2-2 பி.பி. 1-2பி 1-9 கலப்பினால்1995ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட முதல் ரகமாகும். வயது 135 நாட்கள். மகசூல் எக்டருக்கு 4.5 டன்கள். தமிழகத்தில் பின்சம்பா, தாளடி பட்டங்களில் பயிரிடுவதற்கேற்ற ரகமாகக் கருதப்படும். முக்கிய பூச்சி, நோய்களுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டுள்ளது. திருச்சி (ஆர்) 2 - ஐ.இ.டி. 6238, ஐ.ஆர்.36 கலப்பினால் 2002ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ரகமாகும். இந்த ரகம் களர், உவர் நிலங்களில் பயிரிடுவதற்கு ஏற்றதாகவும், பெரும்பாலும் குறுவை, கோடை பட்டங்களில் பயிரிடுவதற்காகவும் பரிந்துரைக்கப்படுகிறது. வயது 115 நாட்கள். மகசூல் எக்டருக்கு 4.5 முதல் 5.0 டன்கள். நீண்ட சன்ன வெள்ளை நிற அரிசியைக் கொண்டுள்ளது. டி.என்.ஏ.யு. நெல் திருச்சி-3 - ஏடீடி 43 சீரகச்சம்பா ரகங்களின் கலப்பினால் 2010ம் ஆண்டு வெளியிடப்பட்ட ரகமாகும். களர், உவர் நிலங்களில் பயிரிட ஏற்றது. வயது 135 நாட்கள். சம்பா, பின்சம்பா, தாளடி பருவங்களில் பயிரிட பரிந்துரைக்கப்படுகிறது. மகசூல் எக்டருக்கு 5883 கிலோ. இந்த ரகம் இட்லி தயாரிக்க ஏற்றதாகும். இந்த ரகம் ஏடீடி (ஆர்) 46ஐக் காட்டிலும் 10.8 சதம் அதிக தானிய விளைச்சலைத் தரக் கூடியது. இலை சுருட்டுப்புழு, குருத்துப்பூச்சி, புகையான், குலைநோய் ஆகியவற்றிற்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**பால் உற்பத்தி உயர்ந்துள்ள நிலையிலும் கால்நடை தீவனங்களின் விலை உயர்வால் பால் பொருள்களின் விலை அதிகரிப்பு**



*ஜெய்ஸ்ரீ போஷ்லே – மாத்வி சாலி*
*பூனா / சண்டிகார்*

*பொதுவாக, அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரையிலான காலத்தில் நாட்டின் பால் உற்பத்தி அதிகரித்து காணப்படும். இதனால் பால் மற்றும் பால் பொருள்களின் விலை இம்மாதங்களில் குறைவாக இருக்கும். ஆனால் இவ்வாண்டு நாட்டின் பல பாகங்களில் பால் உற்பத்தி உயர்ந்துள்ள நிலையிலும் இவற்றின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கால்நடைத் தீவனங்களின் விலை உயர்வே இதற்கு முக்கிய காரணம் என குஜராத் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் உயர் அதிகாரி தெரிவித்தார்.*

*குஜராத்*

*இந்தியாவில் பால் மற்றும் பால் பொருள்கள் உற்பத்தியில் குஜராத் கூட்டுறவு பால் விற்பனையாளர்கள் இணையம் முதலிடத்தில் உள்ளது. இந்த அமைப்பு ‘அமுல்’ என்ற பிராண்டில் பால் பொருள்களை சந்தைபடுத்தி வருகிறது. இந்த அமைப்பின் சந்தை பங்களிப்பு ரூ.8,000 கோடி என்ற அளவில் உள்ளது. இந்த அமைப்பின் பால் உற்பத்தி நாள் ஒன்றிற்கு 98 லட்சம் லிட்டர் என்ற அளவில் உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட 7 சதவீதம் அதிகமாகும்.*

*குஜராத் கூட்டுறவு பால் விற்பனையாளர்கள் இணையம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில், பால் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையிலும் கால்நடைகளுக்கான தீவனங்களின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளதால் பால் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*உள்நாட்டில் குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, கர்நாடகா மாநிலம் பால் மற்றும்*

*பால் பொருள்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இங்கு நாள் ஒன்றுக்கு 39 லட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது.*

*புண்ணாக்கு*

*இதுகுறித்து கோத்ரேஜ், அக்ரோவெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் பீ.எஸ். யாதவ் கூறுகையில், "பொதுவாக அக்டோபர் மாதத்தில் கால்நடை தீவனங்களின் விலை 5–7 சதவீதம் குறையும். ஆனால் இவ்வாண்டு இவற்றின் விலை குறையவில்லை. குறிப்பாக, தவிடு, புண்ணாக்கு மற்றும் முக்கிய கால்நடை தீவனங்களின் விலை அதிகரித்துள்ளது. கால்நடைக்கான புல் உள்ளிட்ட பச்சை தழைகள் போதிய அளவிற்கு கிடைக்கின்றது என்றாலும் நாட்டின் பல பாகங்களில் வைக்கோல் போதிய அளவிற்கு கிடைக்கவில்லை" என்று தெரிவித்தார்.*

*அதேசமயம் தனியார் துறையைச் சேர்ந்த ஒரு சில பால் உற்பத்தியாளர்கள், நாட்டில் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது என்பதை மறுத்துள்ளனர். குறிப்பாக, நடப்பு ஆண்டின் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு பால் உற்பத்தி இல்லை. குறிப்பாக, அமுல் நிறுவனம், கர்நாடகா பால் கூட்டுறவு சங்கத்திடமிருந்து அதிக அளவில் பால் பவுடர்களை கொள்முதல் செய்துள்ளது என்று தெரிவித்துள்ளனர்.*

*ஏற்றுமதி*

*பூனாவைச் சேர்ந்த பராக் மில்க் ஃபுட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் பிரித்தம் ஷா கூறும்போது, "நிறுவனம் அதிக அளவில் பால் ஆடை கட்டிகளை ஏற்றுமதி செய்து வருகிறது. நடப்பு ஆண்டில் பால் உற்பத்தி, சென்ற ஆண்டை விட 8 சதவீதம் குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். குறிப்பாக, நாட்டின் பல முக்கிய இடங்களில் பருவம் தவறிய மழையால் பால் உற்பத்தி குறைந்து போயுள்ளது. இருப்பினும், டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரையிலான காலத்தில் பால் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது" என்று தெரிவித்தார்.*

## இந்தியா, சீனாவில் தேவைப்பாடு அதிகரிப்பு மலேசியா, இந்தோனேஷிய நாடுகளின் பாமாயில் ஏற்றுமதி பன்மடங்கு உயர்வு



*உலக அளவில் சமையல் எண்ணெய், பயன்பாட்டில் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன. இவ்விரு நாடுகளிலும் பாமாயிலுக்கான தேவைப்பாடு*

*அதிகரித்து வருவதையடுத்து மலேசியா மற்றும் இந்தோனேஷியா நாடுகளின் ஏற்றுமதி பன்மடங்கு அதிகரித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.*

*இருப்பினும், இவ்வாண்டில் மேற்கண்ட இரண்டு நாடுகளிலும் பாமாயில் உற்பத்தி குறைந்து போயுள்ளது என சர்வதேச ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார். உற்பத்தி குறைந்துள்ளதால் பாமாயிலின் விலையும் உயர்ந்துள்ளது.*

*இந்தோனேஷியா*

*உலக அளவில், பாமாயில் உற்பத்தியில் இந்தோனேஷியா முதலிடத்தில் உள்ளது. இந்நாடு, சென்ற அக்டோபர் மாதத்தில்14.50 லட்சம் டன் பாமாயிலை உற்பத்தி செய்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட 13 சதவீதம் அதிகமாகும். நவம்பர் மாதம் 25-ந் தேதியன்று இந்தோனேஷியா சீன நாட்டிற்கு 2,15,900 டன் பாமாயிலை ஏற்றுமதி செய்துள்ளது. இந்தியாவிற்கு 5,96,600 டன் ஏற்றுமதி செய்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில், இவ்விரு நாடுகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட முறையே 25 சதவீதம், 24 சதவீதம் அதிகமாகும்.*

*புத்தாண்டு*

*ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் சீன நாடு அதன் புத்தாண்டை கொண்டாடுகிறது. அப்போது சமையல் எண்ணெய்க்கான தேவைப்பாடு அதிகரிக்கும்.*

*மலேசியா*

*நடப்பு ஆண்டின் முதல் 10 மாத காலத்தில் மலேசியாவின் பாமாயில் உற்பத்தி ஒரு சதவீதம் குறைந்து 1.43 கோடி டன்னாக இருந்தது என மலேசிய பாமாயில் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்தோனேஷியாவின் பாமாயில் உற்பத்தி சென்ற ஆண்டு 2.25 கோடி டன்னாக இருந்தது. இது, நடப்பு ஆண்டில் 2.18 கோடி டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*நவம்பர் மாதத்தில் 25 நாள்களில், மலேசியாவின் பாமாயில் ஏற்றுமதி, 19 சதவீதம் உயர்ந்து 13.20 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*